
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1305

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்




## வரலாறு மன்னிக்காது!

சட்டமன்றத்தில், த.வெ.க. உறுப்பினர்களின் வாதம், எதிர்காலத்தில் தமிழ்நாட்டின் வரலாற்றைத் தவறாகப் பதிவு செய்திருக்கும் எனத் தனது ஆதங்கத்தைப் பதிவுசெய்கிறார், மதுரையைச் சேர்ந்த அரசியல் விமர்சகர் கார்த்திகேயன்.

"மதுரை வடக்குத் தொகுதியில் உள்ள மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தை அரசுக் கல்லூரியாக மாற்ற, அந்தத் தொகுதியின் எம்.எல்.ஏ. கல்லணை, சட்டமன்றத்தில் பேசிய வீடியோ பதிவைப் பார்த்து சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லை.

அவருக்கு, அது தமிழ்நாடு அரசின்கீழ் இயங்கும் ஒரு பல்கலைக்கழகம் தான் என்பதும் தெரியவில்லை. ஒரு கல்லூரியைப் பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை வைப்பார்கள். சென்னை 'அண்ணா பல்கலைக்கழகம்', ஒரு காலத்தில் 'கிண்டி பொறியியல் கல்லூரி'. அப்படியிருக்க, இங்கே ஒரு பல்கலைக்கழகத்தைக் கல்லூரியாகத் தரம் இழக்க ஒரு எம்.எல்.ஏ. கோரிக்கை வைக்கிறார்.

பதவிக்கு வருவதற்கு முன்பு, நீங்கள் எப்படி வேண்டுமென்றாலும் இருந்து தொலையுங்கள். நாங்கள் அதனைக் கண்டுகொள்ளவில்லை. பதவிக்கு வந்த பிறகு, அந்தப் பதவிக்கு ஏற்ற அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள். சட்டமன்றத்தில் பேசுவதற்கு முன்பு, கொஞ்சத்துக்குக் கொஞ்சமாவது ஹோம் ஒர்க் (Home Work) பண்ணுங்க.

ஏனென்றால், சட்டமன்றத்தில் பேசப்படும் ஒவ்வொரு சொல்லும் அவைக் குறிப்பில் ஏற்றப்பட்டு, வரலாறாக மாறுகிறது. 20, 30 வருடங்களுக்குப் பிறகு, இந்த ஆட்சியில் பேசிய உரைகளை ஒரு மாணவர் எடுத்து பி.ஹெச்.டி (Ph.D) செய்யும்போது, இழிவான சட்டமன்றக் காலத்தை எடுத்துக்காட்டவே செய்யும். எப்படி இருக்கக் கூடாது என்பதற்கு, நீங்கள்தான் முன்னுதாரணமாகப் பாடப் புத்தகத்தில் இடம்பெறுவீர்கள். இதனை நம் நாட்டு மாணவர்கள் மட்டுமல்ல, வெளிநாட்டு மாணவர்களும் ஆய்வு செய்வதற்கு வாய்ப்பு உண்டு. உலகமெல்லாம் உங்கள் கதை நாறிப்போகும்.

'வந்தான், வாழ்ந்தான், செத்தான்' என்று கோடிக்கணக்கான பேர் இருக்கிறார்கள். அவர்கள் வரலாற்றைக்கூட எதிர்காலம் கேவலமாகப் பேசாது. ஆனால், உங்களைப் போன்றவர்களைக் காலமெல்லாம் கழுவிக் கழுவி ஊற்றிக்கொண்டிருப்பார்கள். இந்த அசிங்கத்தை எந்தக் காலத்துக்கும் துடைக்க முடியாது.

உங்களைத் தேர்ந்தெடுத்த 'மூன்றில் ஒரு வாக்காளர்' முட்டாள் கூட்டத்தை மட்டும் திட்டமாட்டார்கள். இன்று வாழும் மக்கள் அனைவரையுமே வரலாறு மட்டமாகத்தான் பேசும்" என்கிறது அந்தப் பதிவு.

## பிம்ப கருத்துகளை உருவாக்குவது மாபெரும் பிழை!

● எழுத்தாளர் அழகியபெரியவன்

'உண்மையை உண்மை என்றும், பொய்யைப் பொய் என்றும் அறிவதுதான் ஞானம்' என்றார் புத்தர். ஆனால், பொய்யை உண்மை என்று திரிக்கும் வேலை இன்று நடந்து கொண்டுள்ளது.

விதிவிலக்குகளைப் பொதுமைப்படுத்தியும் பொதுமைகளை விதிவிலக்காக்கியும், திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தலித் மக்களுக்கு எதிராகவும் பகையாகவும், நிறுத்துகிற ஆபத்தான வேலையை ஆளும் அதிகாரத்துடன் சேர்ந்துகொண்டு தோழர்கள் செய்கிறார்கள். இது மாபெரும் தவறு. எதிர்கால பொதுச்சமூகக் கருத்தியல் உருவாக்கத்திலும் இயங்கியலிலும் இது கடுமையான எதிர்மறை விளைவுகளை உறுதியாக ஏற்படுத்தும்.

பெரியாரை தலித் மக்களுக்கு எதிரானவராக நிறுத்தும் வேலையை, இப்படித்தான் முன்பு சில தோழர்கள் செய்தார்கள். அதன் பலனை இந்துத்துவ அமைப்புகளும் சாதிய அமைப்புகளும், தீவிர தமிழ்த்தேசிய அமைப்புகளும் அறுவடை செய்தன. விளைவு, இன்று ஐயப்பாட்டுக்குரிய பொதுச்சமூகத்தின் ஆளுமையாக 'பெரியார்' மாற்றப்பட்டுவிட்டார்.

எதிர்காலத்தில் இந்த நிலை, அம்பேத்கருக்கே நிகழ்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஏனெனில், அம்பேத்கருக்கு முன்பே எங்கள் அயோத்திதாசர். எனவே, எங்களுக்கு அம்பேத்கர் முக்கியமில்லை. நாங்கள் ஆண்ட பரம்பரை என்றெல்லாம் இன்று அரசியல் மற்றும் அறிவார்ந்த தோழர்கள் பேசத் தொடங்கிவிட்டனர்.

உள்வாங்குதலும் உட்செரித்தலும் சனாதனத்தின் பண்புகள். அதில் சரணாகதியும் அடக்கம். இதைப் புரிந்துகொள்ளாமல், தங்கள் சுயவிருப்பங்களுக்காக அதிகாரத்துடன் இணைந்து பொய்யான பிம்ப கருத்துகளை உருவாக்குவது மாபெரும் பிழை. மக்களைக் குழப்பி, திசைமாற்றம் செய்யும் செயல். இது நிச்சயமாகக் கடும் எதிர்விளைவுகளை உருவாக்கும்.

தலித் மக்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றும் செய்யவில்லை, இன்னும் 60% தலித் மக்கள் குடிசைகளில்தான் வாழ்கிறார்கள் என்றெல்லாம் பேசுகிற தோழர்களின் பெரும்பாலான முன்னோர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தில்தான் இருந்திருப்பார்கள். இதுவே உண்மை. ஒடுக்கப்பட்ட மக்களைப் பொதுச் சமூகத்துடன் இணைத்து, துணிவூட்டிப் பேசவைத்து, அரசியல் அதிகாரத்தை அவர்களிடம் அளித்ததில், திராவிட முன்னேற்றக் கழகத்துக்குப் பெரும்பங்கு உண்டு. இதன் மீது பொய்முலாம் பூச முடியாது. தொடக்ககால தி.மு.க.வுக்கு ஒடுக்கப்பட்டோர் கட்சி என்றுதான் பெயர்.



திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது வைக்கும் இந்தக் குற்றச்சாட்டுகளைத் தோழர்கள் ஏன் காங்கிரஸ் மீதோ, அ.தி.மு.க. மீதோ எப்போதும் வைப்பதில்லை? உண்மையான பண்ணையாரிய மனோபாவத்தையும் அதன் கொடூரத்தையும் இன்று அதிகாரத்தின் பக்கமிருந்து பேசும் தோழர்களும் அவர்களின் இளந்தொண்டர்களும் எதிர் கொண்டிருக்கிறார்களா? அந்த நிலை எந்தக் கட்சியில் இருந்து தெரியுமா? இன்றுவரையிலும் ஆட்சிக்கு வரமுடியாத நிலை அவர்களுக்கு ஏன் ஏற்பட்டது?

பகுத்தறிவு, மொழிப்பற்று, சுயமரியாதை என உணர்வு பெற்று எழுந்த மக்களை, திரைப்படக் கவர்ச்சியில் மூழ்கவைத்து, அதன் திரைமறைவில் சாதிய அமைப்புகளையும் சாராய அதிபர்களையும், சனாதன இந்துத்துவா சக்திகளையும் வளர்த்தவர்கள் யார், எவர் என்று தோழர்களால் இன்று பொய் கலக்காமல் பேசமுடியுமா? மீண்டும் மீண்டும் விளக்குகளை நோக்கி பாயும் விட்டில்களாய் இளந்தொண்டர்களை எதற்காக மாற்ற முனைகிறீர்கள்?

அடையாள அதிகார அரசியலை மட்டுமே செய்வதல்ல, உண்மையான அம்பேத்கரிய கோட்பாடு.

அரசமைப்புச் சட்டமே இருந்தாலும்கூட, இந்திய மண்ணில் இன்றளவும் சாதியவாதிகளும் சாதி மறுப்பாளர்களும் சனாதன சட்டகத்துக்குள்ளேயே தான் இயங்க முடிகிறது. சட்டத்துக்கு உட்படாத சட்டமே அமலில் உள்ளது.

இந்த உண்மையை மக்களிடம் வெளிப்படுத்தி, இந்தச் சாதியாதிக்கக் கட்டமைப்பை நிர்மூலமாக்கிட ஆதரவுச் சக்திகளுடன் ஒன்றிணைந்து இயங்குவதுதான் உண்மையான அம்பேத்கரிய கோட்பாடு. தோழர்கள் எங்கே இருந்தாலும் அதைச் செய்யுங்கள்.

## ஃப்ளாஷ்பேக்

### சரியாக அமைந்த புகைப்படம்!



2013-ஆம் ஆண்டு, அண்ணா அறிவாலயத்தில் முத்தமிழறிஞர் கலைஞரைக் கண்டு மகிழ்ந்த நேரம். தலைவருடன் இன்றைய பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்களும் இருந்தார். தலைவர் படித்துக்கொண்டிருந்தபோது புகைப்படம் எடுத்ததால், லேசாகக் கடிந்துகொண்டு மீண்டும் சரியாகப் புகைப்படம் எடுக்கச் செய்தார். அப்போது, நீண்ட நேரம் தலைவர் அவர்களுடன் பேசிக்கொண்டு இருந்ததை மறக்கவே முடியாது.

- தி.கூடலரசன்,
பத்திரிகையாளர், சேலம்.



தி.கூடலரசன்

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### அடக்குமுறைச் சட்டங்களுக்கு எதிரான வாதம்!

1975-ஆம் ஆண்டு ஜூன் மாதம், அவசரநிலைப் பிரகடனம் செய்யப்பட்டு, ஆகஸ்ட் மாதத்தில் 'மிசா' (MISA) சட்டங்கள் நாடாளுமன்றத்தில் கடுமையாக்கப்பட்ட போது, தி.மு.க.வின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக இருந்த முரசொலி மாறன், ஆகஸ்ட் மாத நாடாளுமன்றக் கூட்டத் தொடர்களில் தணிக்கை முறையையும் (Press Censorship) அவசர நிலையையும் எதிர்த்துத் தொடர்ந்து உரையாற்றினார். பத்திரிகைத் தணிக்கை இருந்ததால், தி.மு.க. எம்.பிக்கள் நாடாளுமன்றத்தில் பேசிய வீரியமிக்க உரைகள் எதுவும் அன்றைய செய்தித்தாள்களில், வெளிவர முடியாமல் தடுக்கப்பட்டன.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900